

சென்னை தெற்கு மாவட்டம், மதுரவாயல் சட்டமன்றத் தொகுதி, வில்லிவாக்கம் தெற்கு ஒன்றிய தி.மு.க. மற்றும் ஒன்றிய இளைஞரணி சார்பில் துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு இசையரங்கம் ஒன்றிய இளைஞர் அணி அமைப்பாளர் இரா.வினோத் வரவேற்புரையில் ஒன்றியச் செயலாளர் அயப்பாக்கம் அ.ம.துரை வீரமணி தலைமையில் நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில் எஸ்.ஏ.ராஜ்குமார், சின்ன பொண்ணு, மாலதி, முகேஷ், செந்தில் தாஸ், சொற்கோ கருணாநிதி ஆகியோர் பாட்டிசை ஆற்றினர். மாவட்டச் செயலாளர், அமைச்சர் மா.சுப்பிரமணியன், காரம்பாக்கம் க.கணபதி எம்.எல்.ஏ., ஆகியோர் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினர். இதில் வடக்கு பகுதிச் செயலாளர் நொளம்பூர் வே.ராஜன் எம்.சி. மற்றும் கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.

### திருவள்ளூர் மாவட்டம் – புதுமாவிலங்கை

# நெல் கொள்முதல் நிலையத்தில் சம்பா பருவ நேரடி கொள்முதல் பணிகள்!

## அமைச்சர் ஆவடி சா.மு.நாசர் தொடங்கி வைத்தார்!

திருவள்ளூர் டிச 30;

திருவள்ளூர் மாவட்டம், கடம்பத்தூர் ஊராட்சி ஒன்றியம், புதுமாவிலங்கை ஊராட்சியில் கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுபாப்புத் துறையின் கீழ் செயல்படும் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழக சார்பில் நெல் கொள்முதல் நிலையத்தில் கே.எம்.எஸ் சம்பா பருவ கொள்முதல் பணிகள் துவக்க விழா நடைபெற்றது இதில் மாவட்ட ஆட்சியர் மு.பிரதாப் தலைமை வகித்தார் திருவள்ளூர் சட்டமன்ற உறுப்பினர் வி.ஜி.இராஜேந்திரன் த.நு.வா.க மண்டல மேலாளர் செல்வம், இணை இயக்குநர் (வேளாண்மை) செல்வராஜ், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (வேளாண்மை) வேதவல்லி, துணை மண்டல மேலாளர் சீனிவாசன், மாவட்ட மண்டல இணை இயக்குநர் ஜெயந்தி, ஆகியோர் முன்னிலை வகித்தார்கள்

இதில் சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் ஆவடி சா.மு.நாசர் சிறப்பு அழைப்பாளராக கலந்து கொண்டு சம்பா கொள்முதல் பணிகளை தொடங்கி வைத்து விழா பேரூரையற்றினார்

அப்போது அமைச்சர் கூறியதாவது, தமிழ்நாடு முதலமைச்சர் விவசாயிகள் பால் மிகுந்த அன்பு கொண்டு வேளாண்மைத் துறை என அழைக்கப்பட்ட துறையின் பெயரை வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறை எனத் தாம் ஆட்சிப் பொறுப்பேற்ற 2021ம் ஆண்டிலே அறிவித்து உழவர்களுக்காகப் பல சிறப்புத் திட்டங்களை நிறைவேற்றி வருகின்றார்கள். இத்திட்டங்களால் வேளாண் உற்பத்தி பெருகியுள்ளது. உழவர்கள் வளம் பெறுகின்றனர். தமிழ்நாடு உணவு உற்பத்தியில் முன்னேறியுள்ளது. தமிழ்நாடு முதலமைச்சர் தொலைநோக்குத் திட்டமாக முதல் முறையாக தமிழ்நாட்டில்தான் வேளாண்மைக்கென தனிநிதிநிலை அறிக்கை தாக்கல் செய்யப்பட்டு வேளாண் தொழில் வளர்ச்சிக்கு ஊக்கமளிக்கப் பட்டுள்ளது

முதலமைச்சர் அவர்கள் பொறுப்பேற்ற 2021ம் ஆண்டுக்குப் பின் பயிர்க் காப்பீட் திட்டத்தில் பயிர்களுக்கு ஏற்பட்ட பாதிப்புகளுக்காக 29 லட்சத்து 34 ஆயிரம் விவசாயிகளுக்கு 5,148 கோடி ரூபாய் இழப்பீட்டுத் தொகை வழங்கப்பட்டுள்ளது. கடந்த மூன்றறை ஆண்டுகளில் மழை, வறட்சி ஆகிய பேரிடர்களால் 19.84 லட்சம் ஏக்கர் நிலங்களில் பாதிக்கப்பட்ட பயிர்ச் சேதங்களுக்கு மொத்தம் 833.88 கோடி ரூபாய் நிவாரணமாக வழங்கப்பட்டு 11.95 லட்சம் விவசாயிகள் பயனடைந்துள்ளனர்

திராவிட மாடல் ஆட்சி தொடங்கிய 2021-2022 முதலாண்டிலேயே உணவு தானிய உற்பத்தி முந்தைய ஆண்டைவிட 11 சதவீதம் அதிகரித்து 11.74 லட்சம் மெட்ரிக் டன்னாக தொடர்ந்து அதிகரித்து வருகிறது. 187 கோடி ரூபாய் ஒதுக்கீட்டிலான குறுவை சாகுபடி தொகுப்புத் திட்டம் வாயிலாக விவசாயிகளுக்கு அளித்த ஊக்கத்தினால் 2021ல் 4.90 இலட்சம் ஏக்கரிலும், 2022ல் 5.36 லட்சம் ஏக்கரிலும் 2023ம் ஆண்டில் 48 ஆண்டுகளாக இல்லாத சாதனையாக 5.59 லட்சம் ஏக்கரில் குறுவை சாகுபடிசெய்யப்பட்டு உற்பத்தி அதிகரித்து விவசாயிகள் பயனடைந்தனர். திராவிட மாடல் அரசினால் ரூ.39.77 கோடி செலவில்2,33,701விவசாயிகளுக்கு வேளாண் கருவித் தொகுப்புகள் வழங்கப்பட்டுள்ளன. திராவிட மாடல் ஆட்சி தொடங்கிய 2021 முதல் வேளாண் துறையில் அடைந்துவரும் முன்னேற்றங்களுக்காகப் பல்வேறு விருதுகளை மத்திய அரசு வழங்கியுள்ளது. நான்கு மணி நேரத்தில் 6 லட்சத்து 3 ஆயிரம் மரக்கன்றுகளை வெற்றிகரமாக நட்டு முடித்தமைக்காக எலைட் உலக சாதனை புத்தகத்தில் தமிழ்நாடு இடம் பெற்றுப் பாராட்டப்பட்டது. 2023ம் ஆண்டில் மக்காச்சோள படைப்புழு ஒருங்கிணைந்த பூச்சி மேலாண்மை ஆராய்ச்சித் திட்டங்களுக்காக SKOCH ஆர்டர் ஆப் மெரிட் விருது வழங்கப்பட்டது. தமிழ்நாடு வேளாண் பல்கலைக் கழகத்தின் திருவண்ணா மலை மாவட்டம் அத்தியந்தலில் இயங்கும் சிறுதானிய மகத்துவ மையம் 2023ம் ஆண்டிற்கான சிறந்த சிறுதானிய மையத்திற்கான இந்திய வேளாண் ஆராய்ச்சிக் கழகத்தின் விருது உட்பட பல்வேறு விருதுகளைப் பெற்று தமிழ்நாடு வேளாண்மைத்துறைக்குப் புகழ் சேர்த்துள்ளது. ஏத்தாப்பூரில் உள்ள மரவள்ளிக்கிழங்கு மற்றும் ஆமணக்கு ஆராய்ச்சி மையம், இந்திய வேளாண் ஆராய்ச்சிக் கழகத்தால் 2023ஆம் ஆண்டிற்கான சிறந்த அகில இந்திய ஒருங்கிணைந்த ஆராய்ச்சி திட்ட மையம் என்ற விருதைப் பெற்றுள்ளது.

2021ல் வேளாண்மைக்கு முன்னுரிமை அல்லிக்கும் விதத்தில் இத்துறை “வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறை” எனப் பெயர் மாற்றம் செய்யப்பட்டது. இந்தியாவிலேயே முதல் முறையாக வேளாண்மைத் துறைக்கென தனி நிதிநிலை அறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது. விவசாயிகளுக்குத் தடையற்ற இலவச மின்சாரம் வழங்கி வேளாண் தொழில் ஊக்குவிக்கப்படுகிறது மேலும் சுமார் 2 லட்சம் புதிய விவசாய மின் இணைப்புகள் வழங்கபட்டுள்ளன. 2021 முதல் 29.34 லட்சம் விவசாயிகளுக்கு ரூ.5,148 கோடி காப்பீட்டுத் தொகை வழங்கப் பட்டுள்ளது. கடந்த மூன்றரை ஆண்டுகளில் மழை மற்றும் வறட்சியால் பாதிக்கப்பட்ட 11.95 லட்சம் விவசாயிகளுக்கு ரூ.834கோடி நிவாரணம் வழங்கப்பட்டுள்ளது. 2023ல் 48 ஆண்டுகளில் இல்லாத சாதனையாக 5.59 லட்சம் ஏக்கரில் குறுவை சாகுபடி செய்யப்பட்டுள்ளது. திராவிட மாடல் ஆட்சியின் முதல் ஆண்டிலேயே உணவு தானிய உற்பத்தி 11 சதவீதம் அதிகரித்து 11.74 லட்சம் மெட்ரிக் டன்னாக உயர்ந்துள்ளது. ரூ.27.5 கோடி செலவில் 100 உழவர் சந்தைகள் புதுப்பிக்கப் பட்டு, 14 புதிய சந்தைகள் உருவாக்கப்பட்டுள்ளன. 25 சந்தைகளில் காய்கறி கழிவுகளை உரமாக்கும் இயந்திரங்கள் அமைக்கப்பட்டுள்ளன. 4 மணி நேரத்தில் 6.03 லட்சம் மரக்கன்றுகள் நட்டு எலைட் உலக சாதனை படைக்கப் பட்டுள்ளது. சிறந்த சிறுதானிய மையம் மற்றும் பூச்சி மேலாண்மைக்காக தேசிய விருதுகளைத் தமிழகம் வென்றுள்ளது.

திருவள்ளூர் மாவட்டத்தில் நடப்பு சம்பா பருவத்தில் 47,641 ஹெக்டேரில் நெல் பயிரிடப்பட்டு, 2,62,025 மெட்ரிக்டன் மகசூல் எதிர் பார்க்கப்படுகிறது. இதற்காக 70 நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள் மூலம் 1,25,000 மெட்ரிக் டன் நெல் கொள்முதல் செய்ய இலக்கு நிர்ணயிக்கப்பட்டு, விவசாயிகளின் வங்கிக் கணக்கில் நேரடியாகப் பணம் செலுத்தப் பட உள்ளது. கடந்த சொர்ணவாரி பருவத்தில் மாவட்டத்தில் 66 நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள் திறக்கப்பட்டு, 84,766 மெட்ரிக் டன் நெல் கொள்முதல் செய்யப்பட்டுள்ளது. இதன் மூலம் 11,391 விவசாயிகள் பயனடைந்துள்ளனர். விவசாயிகளுக்கு வழங்கப் பட வேண்டிய ரூ. 215 கோடியே 47 லட்சம் தொகை அவர்களின் வங்கி கணக்கில் நேரடியாகச் செலுத்தப்பட்டுள்ளது. இவ்வாறு மாண்புமிகு சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் கூறினார்.

இந்நிகழ்ச்சியில் தலைமை செயற்குழு உறுப்பினர் கே.ஜே.ரமேஷ், மாநில விவசாய அணி இணை செயலாளர் ஆர்.டி.இ.ஆதிசேஷன், ஒன்றிய கழகச் செயலாளர்கள் பிரகாஷ் ஞானஒலி, க.அரிகிருஷ்ணன், மோ. ரமேஷ், எஸ்.மகாலிங்கம், மற்றும் துறை சார்ந்த அலுவலர்கள் கலந்துக்கொண்டனர்.

### காரம்பாக்கம் க.கணபதி எம்.எல்.ஏ. – பி.வில்சன் எம்.பி. ஆலோசனை வழங்குகின்றனர்!

# மதுரவாயல் 147 வது வட்டத்தில் 239 வது பாக முகவர்கள் கூட்டம்!

## வே.ராஜன் எம்.சி. முன்னிலை! வட்டச் செயலாளர் எஸ்.ஜி.மாதவன் அறிக்கை!

சென்னை, டிச. 30 -

மதுரவாயல் வடக்குப் பகுதி, 147 வது வட்டக் கழகச் செயலாளர் மேட்டுக்குப்பம் லயன் எஸ்.ஜி.மாதவன் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

சென்னை தெற்கு மாவட்டம், மதுரவாயல் வடக்குப் பகுதி, 147 வது வட்டத்தில் “என் வாக்குச் சாவடி வெற்றி வாக்குச் சாவடி” என்ற தலைப்பில் 239 வது பாக முகவர்கள் கூட்டம் இன்று (30.12.2025 - செவ்வாய்க்கிழமை) மாலை 6:00 மணிக்கு, சீமாத்தம்மன் நகர் திடீர் நகர் அருகில் வட்டச் செயலாளர் மேட்டுக்குப்பம் லயன் எஸ்.ஜி.மாதவன் தலைமையில் மண்டலக் குழுத் தலைவர், பகுதிக் கழகச் செயலாளர் நொளம்பூர் வே.ராஜன் எம்.சி. முன்னிலையில் நடைபெறுகிறது.

மதுரவாயல் சட்டமன்ற உறுப்பினர் காரம்பாக்கம் க.கணபதி கலந்து கொண்டு தேர்தல் பணி குறித்து ஆலோசனைகள் வழங்குகிறார்.

இக்கூட்டத்தில் தலைமைக் கழக சட்ட ஆலோசகர் பி.வில்சன் எம்.பி. கலந்து கொண்டு சிறப்புரையாற்றுகிறார்.

இதில் வார்டு மாமன்ற உறுப்பினர், சென்னை மாநகராட்சி கல்விக் குழு உறுப்பினர் ரமணி மாதவன் மற்றும் BLA 2, BLC, BDA மற்றும் கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டு சிறப்பிக்கின்றனர்.



திருவள்ளூர் மாவட்டம் கடம்பத்தூர் ஒன்றியம் வெங்கத்தூர் ஊராட்சி மணவாளநகர் கே.இ.என்.சி. அரசு மேல் நிலை பள்ளியில் உங்களுடன் நலன் காக்கும் ஸ்டாலின் முகாம் நடைபெற்றது இதில் திருவள்ளூர் சட்டமன்ற உறுப்பினர் வி.ஜி.ராஜேந்திரன் கலந்துகொண்டு பல்வேறு மருத்துவ முகாமை தொடங்கி வைத்து பொதுமக்களுக்கு வழங்கப்படும் சிகிச்சைகளை பார்வையிட்டு கர்ப்பிணி தாய்மார்களுக்கு ஊட்டச்சத்து பெட்டகம் மற்றும் பல்வேறு நலத்திட்ட உதவிகள் வழங்கினார். உடன் ஒன்றிய செயலாளர்கள் க.அரிகிருஷ்ணன், எஸ். மகாலிங்கம், பிரகாஷ் ஞான ஒளி, நிர்வாகிகள் பொன்.பாண்டியன், பி.கே.நாகராஜ், குமாரன், கொப்பூர் திலீப், மோகனசுந்தரம், டில்லி, காஞ்சிபடி சரவணன், ராஜேந்திர குமார், பி.வாசு உள்பட மருத்துவத் துறை அதிகாரிகள் மருத்துவர்கள் திமுக நிர்வாகிகள் பலர் உள்ளனர்.

### இந்திய அளவில் பதிவு செய்யப்பட்ட

# 39,666 தொழிற்சாலைகளைக் கொண்டு தமிழ்நாடு முதல் இடம்!

## இந்திய பொருளாதார சங்கத்தின் 108–வது கருத்தரங்கில் அமைச்சர் தா.மோ.அன்பரசன் பேச்சு!

சென்னை, டிச.30

இந்திய பொருளாதார சங்கத்தின் 108வது ஆண்டு கருத்தரங்கம் விழாவில் அமைச்சர் தா.மோ.அன்பரசன் கலந்துகொண்டு பேசுகையில், இந்திய அளவில் பதிவு செய்யப்பட்ட 39,666 தொழிற்சாலைகளைக் கொண்டு தமிழ்நாடு முதலிடத்தில் உள்ளது என்று பெருமிதத்துடன் குறிப்பிட்டார்.

இது குறித்து குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ.அன்பரசன் பேசியதாவது:-

இந்திய பொருளாதார சங்கத்தின் 108வது ஆண்டு கருத்தரங்கத்தில் கலந்து கொள்வதில் மிக்க மகிழ்ச்சி அடைகிறேன். மிகச் சரியான நேரத்தில், மிகச் சரியான இடத்தில், இந்த கருத்தரங்கம் நடைபெற்று கொண்டு இருக்கிறது. இந்தியாவிற்கே பொருளாதாரத்தில் வழிக்காட்டும் மாநிலமாக உள்ள தமிழ்நாட்டில், இந்த கருத்தரங்கம் நடைபெறுவது நமக்கெல்லாம் பெறுமையாக உள்ளது.

இந்தியாவிற்கான பொருளாதார திட்டங்களை தீட்ட 1917-ஆம் ஆண்டு உருவாக்கப்பட்ட இந்திய பொருளாதார சங்கமானது 108 ஆண்டுகளாக தனது சேவையை மிகச் சிறப்பாக வழங்கி வருகிறது. இந்த சங்கம் நாட்டின் வறுமையை ஒழித்து, வேலை வாய்ப்பினை பெருக்கி, பொருளாதாரத்தில் வளர்ச்சி அடைய ஆலோசனைகளையும், வழிக்காட்டுதலையும் ஒன்றிய மாநில அரசுகளுக்கு வழங்கி வருகிறது. இந்திய பொருளாதார சங்கத்தில் பெருளாதார மேதை அமிர்த்தியா சென் பொருளாதார வல்லுநர் முன்னாள் பாரத பிரதமர் டாக்டர் மன்மோகன் சிங் ஆகியோர் உறுப்பினர்களாக இருந்து பணியாற்றி உள்ளனர்.

தமிழ்நாடு வேளாண்மையில் மட்டும் இல்லாமல், திருப்பூர் ஆயத்த ஆடை ஏற்றுமதிக்கும், கோயம்புத்தூர் தங்க நகைகள், பொறியியல் பொருட்கள், ஆட்டோமொபைல் உதிரி பாகங்களுக்கும், சிவகாசி நவீன அச்சுத் தொழில், பட்டாசு, தீப்பெட்டிகள் தயாரிப்புக்கும், வேலூர் தோல் மற்றும் காலணிகளும், சேலம் ஜவுளி மற்றும் வெள்ளி நகைகளுக்கும், தஞ்சை பாரம்பரிய கலை பொருள் உற்பத்தி என தொழில்துறையில் பன்முகத்தன்மையுடன் உள்ளது.

MSME என அழைக்கப்படும் குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள்



புதிய தொழில் முனைவோர், நீண்ட கால தொழில் முனைவோர், கிராமப்புற தொழில்முனைவோர், கைவினைக் கலைஞர்கள், சேவை துறையினர், மகளிர் சிறுபான்மையினர் மாற்றுத்திறனாளி தொழில் முனைவேர் என அனைத்து தரப்பினரையும் உள்ளடக்கிய வளர்ச்சிக்கு துணை புரிந்து வருகிறது.

MSME நிறுவனங்களின் முக்கியத்தை உணர்ந்த முதல்வர் அவர்கள் கொரோனா பெருந்தொற்றால் பாதிக்கப்பட்ட MSME நிறுவனங்களை மீட்டெடுக்க, டாக்டர் சுந்தரதேவன் அவர்கள் தலைமையில் வல்லுநர் குழுவை அமைத்து அந்த குழு 16.03.2022 அன்று மாண்புமிகு முதல்வர் அவர்களிடம் தனது அறிக்கையினை சமர்ப்பித்தது. முதல்வர் அவர்கள் அந்த அறிக்கையின் அடிப்படையில், பல்வேறு புதிய திட்டங்களை அறிவித்து செயல்படுத்தி வருகிறார்.

#### ஒற்றைச் சாளர இணைய தளம்!

குறிப்பாக, 200க்கும் மேற்பட்ட உரிமங்களை தொழில் நிறுவனங்கள் ஒரே இடத்தில் பெற்றிட ஒற்றைச் சாளர இணைய தளம் 2.0 திட்டம், இந்தியாவிலேயே எந்த மாநிலத்திலும் இல்லாத திட்டமான ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினரை தொழில்முனைவோர்களாக உருவாக்கும் அண்ணல் அம்பேத்கர் தொழில் முன்னோடிகள் திட்டம், அனைத்து கைவினை கலைஞர்களுக்கும் மானியத்துடன் கடன் உதவி வழங்கிடும் கலைஞர் கைவினைத் திட்டம், தொழில்முனைவோருக்கு எளிதில் கடன் கிடைத்திட 90 சதவீதம் வரை கடன் உத்தரவாதம் அளித்திடும் தமிழ்நாடு கடன் உத்தரவாதத் திட்டம்,

அரசு நிறுவனங்களுக்கு MSME நிறுவனங்கள் வழங்கும் சேவை மற்றும் விற்பனைகளுக்கான பட்டியல்களை வங்கியில் வைத்து எளிதாக கடன் பெற தமிழ்நாடு வர்த்தக வரவுகள் மற்றும் தள்ளுபடி தளம் TN TReDS திட்டம். கிராமப்புறப் பகுதிகளில் உள்ள தொழில் முனைவோரின் வளர்ச்சிக்காகவும், நிலையான வேலை வாய்ப்பிற்காகவும் குறுங்குழும மேம்பாட்டுத் திட்டம் MICRO CLUSTER, MSME நிறுவனங்கள் உலகத்தரத்தில் உற்பத்தி செய்திட நவீன தொழில்நுட்ப வசதியை அளித்திடும் பெருங்குழும மேம்பாட்டுத்திட்டம் MEGA CLUSTER, தொழிலாளர்களுக்கு குறைந்த வாடகையில் தொழிலாளர் தங்கும் விடுதிகள்,

தொடக்க நிலையில் உள்ள STARTUP நிறுவனங்களுக்கு உதவிடும் புத்தொழில் ஆதார நிதி வழங்கும் திட்டம், SC/ST STARTUP நிறுவனங்களுக்கு ஆதார நிதி திட்டம், சமச்சீர் தொழில் வளர்ச்சிக்கு உதவிடும் வட்டார புத்தொழில் மையங்கள், SC/ST STARTUP நிறுவனங்களுக்கு உதவிடும் தந்தை பெரியார் சமூக நீதி தொழில் வளர் மையம், வேளாண் விளை பொருட்களுக்கு நல்ல விலை கிடைத்திட தமிழ்நாடு உணவுப் பதப்படுத்துதல் மற்றும் வேளாண் ஏற்றுமதி மேம்பாட்டுக் கழகம் TNAPEX உருவாக்கம்,

தென்னை நார் தொழில் வளர்ச்சிக்கு தமிழ்நாடு கயிறு வணிக மேம்பாட்டு நிறுவனம் -TANCOIR உருவாக்கம், பள்ளி மாணவர்களிடம் புதிய கண்டுப்பிடிப்புகளை ஊக்குவிக்க பள்ளி புத்தாக்க மேம்பாட்டுத் திட்டம், 5 ஆண்டுகளில் 1 லட்சம் மகளிரை தொழில் முனைவோராக்கும் தமிழ்நாடு மகளிர் தொழில் முனைவோர் மேம்பாட்டுத் திட்டம் (TWEES), கோயம்புத்தூரில் தங்க நகை பூங்கா, சேலத்தில்வெள்ளி கொலுசு உற்பத்தி வளாகம், கோயம்புத்தூரில் உலக புத்தொழில் மாநாடு,

கடந்த 4½ ஆண்டுகளில் 22,150 நிறுவனங்களுக்கு, 10 வகையான மானியங்களுக்கு ரூ. 1,569 கோடி வழங்கி எண்ணற்ற சாதனைப்படைத்து வருகிறது முதல்வர் தலைமையிலான திராவிட மாடல் அரசு.

MSME துறையால் செயல் படுத்தப்படும் 6 வகையான சுயவேலைவாய்ப்பு திட்டங்களில் 10 ஆண்டுகால அ.தி.மு.க ஆட்சியில் 55,230 தொழில் முனைவோர்கள் உருவாக்கப்பட்ட நிலையில், 4½ ஆண்டு கழக ஆட்சியில், ரூ.2,415.41 கோடி மானியத்துடன், ரூ.6,226.63 கோடி கடன் உதவி வழங்கப்பட்டு, 77,786 நபர்கள் புதிய தொழில் முனைவோர்களாக உருவாக்கப் பட்டுள்ளனர்.

#### சமச்சீரான தொழில் வளர்ச்சி

தமிழ்நாட்டில் சமச்சீரான தொழில் வளர்ச்சி ஊக்குவிக்க வேண்டும் என்ற நல்ல நோக்கில் 13 மாவட்டங்களில் ரூ.387 கோடி மதிப்பீட்டில் 697.81 ஏக்கர் பரப்பளவில் 17 புதிய தொழிற்பேட்டைகள் தொடங்கப்பட்டுள்ளது. 14 மாவட்டங்களில் 543.31 ஏக்கர் பரப்பளவில் ரூ. 419.58 கோடி மதிப்பில், 16 புதிய தொழிற்பேட்டைகள் உருவாக்கப்பட்டு வருகிறது.

முதல்வர் அவர்களின் புரட்சிகரமான திட்டங்களால், இந்திய அளவில் 39,666 பதிவு செய்யப்பட்ட தொழிற்சாலைகளை கொண்டு தமிழ்நாடு முதல் இடம். தொழிற்சாலைகளில் பணிபுரியும் மகளிர் எண்ணிக்கையில் 42% உயர்ந்து முதல் இடம். நான் முதல்வன் திட்டத்தின் மூலம் திறன் வாய்ந்த தொழிலாளர்கள் எண்ணிக்கையில் முதல் இடம். ஏற்றுமதி தயார் நிலை குறியீட்டில் 80.89 புள்ளிகள் பெற்று தமிழ்நாடு முதல் இடம். உற்பத்தி பொருட்களை மாநிலங்களிடையே எளிதாக கொண்டு செல்வதில் (LOGISTICS) தமிழ்நாடு முதல் இடம். புதிய கண்டுப்பிடிப்புகளுக்கு காப்புரிமை (PATENT) பெறுவதில் முதல் இடம். TN START UP, இந்திய அளவில் சிறந்த செயற்பாட்டாளர் விருதினை பெற்று தமிழ்நாடு முதல் இடம். மின்னனு சாதனங்கள் ஏற்றுமதியில் முதலிடம், நாட்டின் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் தமிழ்நாடு 16 % உயர்ந்து முதல் இடம் என சாதனை மேல் சாதனை படைத்து வருகிறது.

இந்திய பொருளாதார சங்கத்தால் 3 நாட்கள் நடத்தப்பட்ட இந்த கருத்தரங்கில் தமிழ்நாடு 2030ல் ஒரு டிரில்லியன் டாலர் பொருளாதாரம் என்ற இலக்கை அடைவதற்கு தேவையான செயல் திட்டத்தினையும், ஆலோசனைகளையும் வழங்கவேண்டும் என கேட்டுக்கொண்டார்.

இவ்விழாவில், ஒன்றிய மாநில அரசுகளின் உறவு குறித்த உயர்மட்ட குழுவின் உறுப்பினர் டாக்டர் நாகநாதன், வேல்ஸ் பல்கலைகழகத்தின் நிறுவனர் வேந்தர் டாக்டர் ஐசரி கணேஷ், இந்தியா முழுவதிலுமிருந்து வந்திருந்து பொருளாதார வல்லுநர்கள், பேராசிரியர்கள், கல்வியாளர்கள், பெற்றோர்கள், மாணவ - மாணவிகள் என அனைவரும் கலந்து கொண்டனர்.

### மூத்த வழக்கறிஞர் பி.வில்சன் எம்.பி. – நொளம்பூர் வே.ராஜன் பங்கேற்பு!

# மதுரவாயல் தொகுதியில் “என் வாக்குச்சாவடி வெற்றி வாக்குச்சாவடி”!

## காரம்பாக்கம் க.கணபதி எம்.எல்.ஏ. அறிக்கை!

சென்னை, டிச.30-

முதலமைச்சர் கழகத் தலைவர் அவர்களின் அறிவிப்பின்படி சென்னை தெற்கு மாவட்ட கழக செயலாளர் அமைச்சர் மா.சுப்பிரமணியன் அவர்களின் ஆலோசனைப்படி மதுரவாயல் சட்டமன்றத் தொகுதியில் பாகம் எண் 208, 239, 304 ஆகிய வாக்குச்சாவடிக் குட்பட்ட பகுதியில் “என் வாக்குச்சாவடி வெற்றி வாக்குச்சாவடி” கூட்டம் இன்று (30.12.25 செவ்வாய் கிழமை) மாலை 5.00 மணிக்கு 155-வது வட்டம் அம்மன் நகரில் பாகம் எண்.208, மாலை 6.00 மணிக்கு 149-வது வட்டம் வளசரவாக்கம், பாகம் எண்.304, மாலை 7.00 மணிக்கு 147-வது வட்டம் திடீர் நகரில் நடைபெற உள்ளது.

இக்கூட்டத்தில் தலைமை கழக வழக்கறிஞர், பாராளுமன்ற உறுப்பினர் பி.வில்சன் எம்.பி. கலந்துகொண்டு கருத்துரை வழங்க உள்ளார்.

இந்நிகழ்ச்சியில் மதுரவாயல் வடக்கு பகுதி செயலாளர் நொளம்பூர் வே.ராஜன் எம்.சி., வட்ட கழக செயலாளர்கள் எஸ்.ஜி.மாதவன், த.ரமேஷ், ஆ.செல்வம் ஆகியோர் கலந்துகொள்கிறார்கள்.

ஆகவே இக்கூட்டத்திற்கு பாகத்துக்கு உட்பட்ட பாக நிலை முகவர்கள் (BLA-2), பாக டிஜிட்டல் ஏஜெட்டுகள் (BDA), பாக நிலை உறுப்பினர்கள் (BLC), கழக நிர்வாகிகள், கழக முன்னோடிகள், பொதுநல சங்க நிர்வாகிகள் கலந்து கொள்கிறார்கள் என தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.



தியாகராயநகர் சட்டமன்ற தொகுதியில் நடைபெற்று வரும் சிறப்பு வாக்களர் சேர்ப்பு முகாமிற்கு நேரில் சென்று, அங்கு மேற்கொள்ளப்பட்ட பணிகளை கழக துணைப் பொதுச் செயலாளர் ஆ.ராசா எம்.பி. ஆய்வு செய்தார். கழக நிர்வாகிகள் உடன் உள்ளனர்.